*<u>CC.No. 318/2021</u>*

***<u>P.W.5 வீரவர்மன் த/பெ. குப்புசாமி</u>***

15.04.2025 ***எதிரி ஆஜர்.***

*கடந்த 18.02.2025 ஆம் தேதியன்று சாட்சி சாட்சியம் அளித்த வகையில் எதிரியை அடையாளம் காண்பிப்பதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகிஉள்ளதால் சாட்சி எதிரியை அடையாளம் காட்டுவதற்காக முதல் விசாணையின் தொடர்ச்சி*

18.02.2025 ஆம் தேதி முதல் விசாரணையின் போது விபத்து ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் தெரியும் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறார். விபத்து ஏற்படுத்திவிட்டு ஆஜர் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார் அவரை அருகிலிருந்த ஊர்மக்கள் பிடித்து அழைத்து வந்து அவரை விசாரித்தபோதுதான் அவர் பெயர் குமார் என்று தெரியும். அதே போல் விபத்தில் காயம்பட்ட நபர்களின் பெயரும் அங்கு உள்ளவர்கள் சொன்னதன் அடிப்படையில் தான் தெரியும். விபத்து கேள்விப்பட்டு சண்முகத்தின் மகன் ஸ்ரீதர் மற்றும் திருநாவுக்கரசு மனைவி கமலாம்மாள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். பின்னர் காயம்பட்ட சண்முகம்மற்றும் திருநாவுக்கரசை வாகனத்தின் மூலம் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச சென்று விட்டார்கள். தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாக பிறகு கேள்விப்பட்டேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1.முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரியை ஊர்மக்கள் பிடித்துவிட்டதாகவும், அவர்கள்தான் எனக்கு எதிரியின் பெயரை கூறினார்கள் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன்.

2. நான் பணிபுரியும் ஓஎன்சிஜி குவார்டர்ஸக்கு 3 சிப்டாக பணிமாறுதல் நடைபெறும். சம்பவ நாள் அன்று மதியம் 2 மணி சிப்டிற்கு நான் சென்றேன். எனக்கு 2 மணி முதல் 10 மணிவரை சிப்ட் நேரம்ஆகும். ஓஎன்சிஜி குவார்டர்ஸில் இருக்கும் இன்ஜினியருக்கு பாதுகாப்பு அளிப்பது என்றால் சரிதான். சம்பவ நாளன்று நான் ஓஎன்சிஜி குவார்டர்ஸில் பணியில் தான்இருந்தேன். சம்பவ நாளன்றும் எனது பாதுகாப்பு அறையில் வேலை செய்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனது

குவாட்ரசுக்கு மேல்புறம் வடபுறம் மற்றும் கீழ் புறம் நான்கு பகுதிகளுக்கும் 6 அடிக்கு மேல் சுற்று சுவர் உள்ளது என்றால்- சுற்று சுவர் கிடையாது. எனது அறை கேட்டுக்கு உள்ளே உள்ள அறை என்று சொன்னல் சரிதான்.அந்த கேட் உயரம் 10 அடி என்றும் அகலம் 20 அடி என்றால் சரிதான். ஆனால் கேட் திறந்துதான் இருக்கும்.

3.எனது பணி எனது அறையில் உடகார்ந்து கொண்டு எத்தனை வண்டி உள்ளே வருகிறது எத்தனை வண்டி வெளியே போகிறது என்று வண்டியின் எண்களை குறிப்பதுவும் பாதுகாப்பு வழங்குவதும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது அறையில் தான் இருந்தேன். சத்தம் கேட்டுத்தான் விபத்தை பார்த்தேன் என்றால் சரிதான்.

4.ஆதிச்சபுரத்திரலிந்து வேதபுரம் செல்லும்ரோடு வடக்கு தெற்கான ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு அருகில் டீக்கடை மற்றும் மெடிக்கல் உள்ளது என்றால் சரியல்ல. அந்த ரோட்டிலிருந்து கிழக்குபுறம் போகும் சாலையில்தான் பணிபுரியும் குடோன் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5.நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது குடியிருப்பு அறையிலிருந்து மேற்கு பக்கம் சுமார் 300 மீ- தொலைவில் தான் வேதபுரம், ஆதிச்சபுரம் பிரதான சாலை இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. ஓஎன்சிஜி குவாட்ரசிலுள்ள எனது அறையிலிருந்து சம்பவ இடத்தை நேரடியாக பார்க்க முடியும் என்று சொன்னால் சரியல்ல.

எனது முதல் விசாரணையில் சொன்ன சாட்சிகள் உண்மைக்கு மாறானது என்றும் சம்பவத்தை நேரிட்டு பார்க்காமல் வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

உண்மையை மறைத்து எதிரியை பொய்யான வழக்குடன் தொடர்பு படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- எம். சுரேஷ் கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.